# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :27 July 2025*

கோட்டை:7 வாயில்:27 ஜூலை 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long, Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.



நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


**குறுந்தொகைப் பாடல்களில் உளவியல் பகுப்பாய்வு அணுகுமுறை**
**முனைவர் இரா.ஜெய்சங்கர்**

**புறநானூற்றுப் பாடல்களில் ஔவையாரின் ஆளுமைத்திறன்**
**முனைவர் அ.சேமலா வசந்தா**

**ஐங்குறுநூற்றில் பாணர்**
**தே. சுதா**

**தொல்காப்பியம் காட்டும் நிறக்கோட்பாடுகள்**
**க.சுவாதி**

**சங்க இலக்கியங்கள் சுட்டும் களவு கோட்பாடுகள்**
**ஏ. தீபா**

**சிலம்பில் இயற்கை**
**க. மங்கையர்க்கரசி**

**மணிமேகலையில் மனிதநேயம்**
**பெ. ஜோதி,**

**இலக்கியங்களில் விருந்தோம்பல் பண்பு**
**முனைவர் ஏ.சித்ரா**

**பண்டைய தமிழர்களின் மணமுறைச் சடங்குகள்**
**முனைவர் கி.சரண்யா**

**ஆற்றுப்படைகலைஞர்களின் அறம்**
**கு. சிந்து**

**பண்டைகாலத்து தமிழக மக்களின் வாழ்க்கைமுறை**
**ம. துர்க்காதேவி**

**ஒரு சொல் பல பொருள் - வேர்ச்சொல் வழி விளக்கம் அறிதல்**
**முனைவர் ஆ. செந்தமிழ்க்கோதை**

**வள்ளுவர் கூறும் வாழ்வியல் அறம்**
**முனைவர். நா. ஹேமமாலதி**



**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

**நன்றி**

# அகத்தினுள்


**தமிழர் நிலத்தில் பாலையும் ஒட்டகமும்**
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

**தமிழ் மொழியில் வெளிப்படும் கணிதவியல் கூறுகள்**
முனைவர்.அ.ரேவதி

**தமிழர் மரபும் வாழ்வியலும்**
பொ. அகத்திய பாலா

**தமிழ்ச் சமூகத்தில் நாட்டுப்புறத் தெய்வங்கள்**
முனைவர் வ.மோகனப்பிரியா

**பெரியபுராணத்திற்கு அணிசெய்யும் சிலேடையணி**
வே.வெ.சுஜாதா

**கூற்றுகளில் மெய்ப்பாடு புலப்படும் விதம்**
மேபல் சுபிதா த.

**பந்தணைநல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையும் அவர்தம் நாட்டியக் கலைப்பணியும்**
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

**உலாப்பிரபந்தங்களில் நாட்டியசாஸ்திரம் கூறும் அஷ்டவித நாயகிகளின் வகிபங்கு**
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

**நாட்டுப்புற வழக்காறுகள் நோக்கில் கானகன் நாவல்**
ர.விண்ணிலவு1, முனைவர் அ. மரிய செபஸ்தியான்2

**சங்கக் கால திணை பதிவுகளின் இடையர் இன மக்களின் சமூக வாழ்க்கையும் கீதாரி நாவலில் இடையர் வாழ்வியல்**
ஓர் ஒப்பாய்வு- சே.நிர்மலா1, முனைவர் அ.மரிய செபஸ்தியான்2

**வேள்பாரி புதினத்துள் அகநானூற்று காட்சிகள்**
ர.கிருஷ்ணவேணி



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


சைகோன் - புதுச்சேரி புதினம் முன்னிறுத்தும் காலனிய ஆணாதிக்கமும், பின்காலனியப் பெண்ணியமும்

கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

கவிஞர் எழிலவனின் 'மரவாடியில் ஒரு போதிமரத்தில்' படைப்பாக்க உத்திகள்

சி.ஆர்த்தி

தேனி சீருடையான் புதினங்களில் வெளிப்படும் பெண்களின் நிலை

பி.தீபாவதி

கீரனூர் ஜாகிர் ராஜா புதினங்களில் இஸ்லாமியர் பண்பாடு

முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

உரிப்பொருள் உணர்த்தும் கவிஞர் சுகிர்தராணி கவிதைகள்

ந.ஸ்டாலின்

தமிழ்த் திரை இசைப் பாடல்கள்

கார்த்திக் க

நிர்வாணமுக்தி சிறுகதை - பெண்மைய விமர்சனம்

ஜென்சி வை கி

இன்றைய நாளிதழ்களில் தலையங்கங்கள்

சே. வனிதா

Historical And Archaeological Impact Of Palayarai

Dr.S.Neelavathy

Chola's Temples As A Social Organization

A Study - S. Mala

A Statue Of Prakara At The Kumbakonam Nageswara Temple

M. Amirthavalli



அட்டைப்படம் உதவி

இணையம்

நன்றி



# தமிழ்

# கூற்றுகளில் மெய்ப்பாடு புலப்படும் விதம்

## *The Manner in which meipaadu is revealed through statement*

***Author: MABEL SUBITHA T.***
*Research scholar,*
***Guide: Dr. DHANYA V.S***
*Assistant Professor,*
*Department of Tamil,*
*Unversity college,*
*Palayam, Thiruvananthapuram.*
.

***Abstract:***

*A statement is something that is said. It is said, it is spoken, it can mean something that is said. It can mean a statement or on opinion. In English, this is called a statement or assertion. Statements are the grammatical basis of Tolkappiyam. A statement is not a conversation, it is individual conversation. The inner thoughts or messages of the hero, heroine, friend, mother, foster mother are exchanged through statements. How such a statement should be made should be said like water leaking into an earth vessel. The heroine should not express the desire that the heroine has through language. The heroine should express her desire in the same way that water seepage into on mud vessel. Statement should be centered substantive.*

*Sangam literature is a statement. Tholkapiyar has specifically identified statement (kootu) as a component of a verse. The uniqueness of statement, that is speaking as if one were a character in the story. Statement special feature of saying is that independence that is, they become the narrator and speak and therefore the dual status of the saying, which is the expressions of the speakers opinion and the expression of the mood is embedded in the language. Another special feature of being a saying is that, meipaadu is embedded in it. Since meipaadu is not only relevant to drama, it is also relevant to a monologue that is saying, I also mention meipaadu as a poetic element. Sanskrit scholars refer to meipaadu — assertion as thoni. Natural love and feelings since love caused by external stimulation are expressed through the*

*statement itself, it contains both a direct meaning and a declarative meaning. The purpose of this study is to highlight the truth expressed in such statements.*

**Keywords:** *Statment, Assertion, Imagism, Mental image.*

**கட்டுரையாளர்: மேபல் சுபிதா த.**

தமிழ்த் துறை,

முனைவர் பட்ட ஆய்வாளர்,

**நெறியாளர் : முனைவர் தன்யா வி.எஸ்,**

உதவி பேராசிரியர்

தமிழ்த் துறை,

பல்கலைக் கழக கல்லூரி,

பாளையம், திருவனந்தபுரம்

**ஆய்வுச் சுருக்கம்:**

கூற்று என்றால் கூறப்பட்டது, உரைக்கப்பட்டது, மொழியப்பட்டது, சொல்லப்பட்டது என்று பொருள் கொள்ளலாம். ஒரு அறிக்கையையோ அல்லது கருத்தையோ குறிக்கலாம் ஆங்கிலத்தில் இதை ***statment*** அல்லது ***assertion*** என்று கூறுவர். கூற்றுகள் தான் தொல்காப்பிய இலக்கண அடிப்படையாகும். கூற்று என்பது உரையாடல் அல்ல தனியாகப் பேசுவது. தலைவன், தலைவி, தோழி , நற்றாய், செவிலி ஆகியோரின் உள்ளக்கருத்தை அல்லது செய்தியைப் பரிமாறுவது கூற்றுகளின் வாயிலாக நிகழ்கிறது. அத்தகைய கூற்று எவ்வாறு நிகழ வேண்டுமென்றால் மண்கலத்தில் நீர் கசிவது போன்று கூற வேண்டும். தலைவன்பால் இருக்கும் வேட்கையைத் தலைவி மொழியால் கூறக்கூடாது. மண்கலத்தில் நீர் உள்ளது என்பதை கசிந்து எவ்வாறு காட்டுகிறதோ அவ்வாறே தன்னுடைய வேட்கையை தலைவி வெளிப்படுத்த வேண்டும். கூற்றுகள் பொருண்மையை மையப்படுத்தியதாக அமைய வேண்டும்.

சங்க இலக்கியம் கூற்றாக அமைந்துள்ளது. தொல்காப்பியர் கூற்று என்பதை ஒரு செய்யுள் உறுப்பாக குறிப்பிட்டுள்ளார். "கூற்றுகளின் சிறப்பு தற்சார்பின்மை என்பார் அதாவது கதைமாந்தராக மாறிப்பேசுவது அதனால் கூறுபவரின் கருத்தின் வெளிப்பாடாகவும், மனநிலையின் புறப்பாடாகவும் அமையும் இரட்டை நிலை கூற்று மொழியில் புதைந்துள்ளது என்பது அதன் சிறப்பு"[1] "கூற்றாக அமைந்ததன் இன்னொரு சிறப்பு அதில் மெய்ப்பாடு புதைந்துள்ளதுதான் மெய்ப்பாடு நாடகத்திற்கு மட்டும் உரியது அல்ல கூற்றாக அமைந்த தனிப்பாடலுக்கும் உரியது என்பதால் தான் மெய்ப்பாட்டையும் ஒரு செய்யுள் உறுப்பாக குறிப்பிடுகிறார் தொல்காப்பியர் உண்மையில் சாதாரண உரையாடல்களிலும் மெய்ப்பாடு உண்டு. வடமொழியில் தொனி ஆய்வாளர்கள் மெய்ப்பாட்டையும் சேர்த்தே பேசுகிறார்கள்"[2] இயற்கையான காதல் உணர்வும் புறத்தூண்டுதலால் ஏற்படும் காதலும் கூற்று

மூலமே வெளிப்படுத்தப்படுவதால் நேர் பொருளோடு குறிப்புப் பொருளும் அடங்கியிருக்கும். அத்தகைய கூற்றுகளில் வெளிப்படும் மெய்ப்பாட்டினை எடுத்துக் கூறுவதே இவ்வாய்வின் நோக்கம் ஆகும்.

**திறவுச் சொற்கள் :-**

இமேசரி, விபாவங்கள், இரசம், தொனி, சிருங்காரம்,

**முன்னுரை:-**

மெய்ப்பாடு என்பது புலன்களின் வழியாக ஒருவர் மற்றொருவரிடம் தன் உள்ளக் குறிப்பை வெளிப்படுத்துவதாகும். உள்ளக்குறிப்பின் மூலம் ஒருவர் வெளிப்படுத்தும் உணர்வை எளிதாகப் புரிந்து கொள்ளலாம். ஒரு கவிஞன் தன்னுடைய கவிதையில் நுண்ணிய முறையில் வெளிப்படுத்திய மையப்பொருளின் அர்த்தத்தின் வெளிப்பாடுதான் மெய்ப்பாடு ஆகும். பேராசிரியர் “மெய்ப்பாடென்பது சொல்கேட்டார்க்குப் பொருள் கண்கூடாதல்”[3] என்கிறார். ஒரு கவிதை அல்லது பாடலைக் கேட்கும்போது அதன் பொருள் கேட்பவரின் மனதில் ஒரு தெளிவான காட்சியாகவோ அல்லது உணர்வாகவோ தோன்றுதல் வேண்டும் அது வெறும் வார்த்தைகளாக மட்டும் இல்லாமல் கேட்பவரின் மனதில் ஓர் அனுபவமாக உணரப்பட வேண்டும் அந்த உணர்வே மெய்ப்பாடு ஆகும். சங்க இலக்கியப் பாடல்களில் தோழி, தலைவன் , தலைவி, ஆகியோரின் கூற்றுகளில் மெய்ப்பாடு எங்ஙனம் புலப்படுகிறது என்பதை இக்கட்டுரையில் காணலாம்.

**மெய்ப்பாடு சொற்பொருள் விளக்கம்:-**

மெய் - உடம்பு; பாடு - படுதல் அல்லது தோன்றுதல் அதாவது ஒருவரின் உள்ளத்து உணர்ச்சிகள் பிறருக்குப் புலனாகுமாறு பிற உறுப்புகளில் தோன்றுவதே மெய்ப்பாடு ஆகும். ஒருவரின் மெய் வேறுபாடு அறிந்து மற்றவர் ஒழுக வேண்டும் என்று தொல்காப்பியர் எண் வகை மெய்ப்பாடுகளைக் கூறுகிறார். பேராசிரியர், தொல்காப்பிய மூல நூற்பாக்களை நன்கறிந்து, “மெய்ப்பாடு என்பது பொருட்பாடு அதாவது மெய் - பாட்டினுள் இருக்கும் கருத்து. பாடு - படுதல் அது படிப்பவர் உணருமாறு வெளிப்படுதல்; மெய்ப்பாடு என்பது சொற் கேட்டார்க்குப் பொருள் கண்கூடாதல்; கவிப் பொருளுணர்ந்தால், அதனானே சொல்லப்படும் பொருள் உய்த்து வேறு கண்டாங்கு அறிதலை மெய்ப்பாடென்றான்.”[4] என்று மெய்ப்பாடு என்னும் சொல்லுக்கு பொருள் கூறப்படுகிறது.

**வடமொழி இரசக் கோட்பாடும் மெய்ப்பாடும்:-**

தமிழும் வடமொழியும் தொன்மையுடையதாதலின், இவ்விரண்டு மொழிகளின் இடையேதான் அவ்வொற்றுமை வேற்றுமைகள் தெளிவாகத் தோன்றுகின்றன. எட்டு

மெய்ப்பாடுகள் வடமொழியில் பரத முனிவர் எட்டு ரசங்கள் என்றாலும் அவற்றினிடையே கருத்து வளர்ச்சி வேறுபாடுகள் அடிப்படையானவையாகும். "உவகை மெய்ப்பாடு சிருங்கார இரசமாகுமா? உவகை பிறப்பிற்கு அடிப்படையான செல்வம், புலன், புணர்வு, விளையாட்டுகளில் இறுதியிரண்டே வடநூலுடன் ஒத்துவரும். செல்வத்தால் வரும் மகிழ்ச்சியும் வடமொழியில் சிருங்காரம் எனப்படா"[5] ஆகவே நுட்பமாக இவ்விரண்டு நூலையும் கற்பவர் தான் கருத்து வளர்ச்சி நிலையில் உள்ள ஒற்றுமை வேற்றுமை வேறுபாடுகளைக் கண்டு கொள்வர்.

பரத முனிவர் இரச கோட்பாட்டை நாடகத்தை முன்வைத்தும், தொல்காப்பியர் உலக வாழ்க்கை தழுவிய அகத்தினை பாடல்களை முன்வைத்தும், மெய்ப்பாட்டைக் கூறுகிறார். மெய்ப்பாடு ரசம் இவற்றை தமிழண்ணல் தொல்காப்பியரின் இலக்கிய கொள்கை என்ற நூலில் கீழ்க்கண்டவாறு பகுத்துள்ளார்.

| **வரிசை எண்** | **மெய்ப்பாடு** | **இரசம்** |
|---|---|---|
| 1. | பொருள் பற்றியது. | சுவை பற்றியது |
| 2. | இலக்கியம் பற்றியது | நாடகம் பற்றியது |
| 3. | உலக இன்பம் பற்றியது | பேரின்ப அனுபவம் பற்றியது |
| 4. | சமூகச் சார்புடன் விளக்கப்பட்டது | சமய சார்புடன் விளக்கப்பட்டது |
| 5. | உலகியலிலிருந்து இலக்கியத்திற்கு ஏற்றிப்பார்க்கப்பட்டது | நாடகத்திலிருந்து காவியத்திற்கு ஏற்றி பார்க்கப்பட்டது |
| 6. | நோக்குறுப்பால் உவமையால் பாட்டுப் பொருளால் பெறப்படுவது | தொனியால் பெறப்படுவது |
| 7. | படிக்குங்கால் தோன்றுவது | படித்தபின் எஞ்சி நிற்பது |
| 8. | முதல், கரு, உரி, இயைபு போன்ற பொருளமைதியால் உருவாவது | விபாவங்களின் ஒருங்கிணைவால் தோன்றுகிறது. |

| | | |
|---|---|---|
| 9. | படைப்போன், படிப்போனிடையே ஏற்படும் இடைத்தொடர்பு பற்றியது | நடிப்போன் காண்போன் இடையே ஏற்படும் இடைத்தொடர்பு பற்றியது |
| 10. | இலக்கிய ஆக்கம் பற்றியது | இலக்கிய பயன் துய்த்தல் பற்றியது. |

**மேலை இலக்கிய உருக்கோட்பாடும் மெய்ப்பாடும்:**

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (1912-1917) அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் ஓரியக்கமாக சில கவிஞர்களால் தொடங்கப்பட்டு வளர்ந்ததாகும். எஸ். ரா பவுண்டு (*Ezra pound*) போல்வார் சில இலக்கிய கொள்கைகளைக் குறிக்க தங்களுக்குள் வைத்துக்கொண்ட சொல் உருக்கோட்பாட்டியல் (*Imagism*) என்பதாகும். "கண்ணால் கண்டவாறே எவ்வித உரை விளக்கமுமின்றிக் கவிதையில் தீட்டுவது இதற்குள் அடங்கும்"[6] "கண்ணாற் காண்பதன் மூலம் உள்ளத்தில் ஓர் உருத்தோற்றத்தை ஏற்படுத்துவதே உருகாட்சியாகும். இங்குக் காட்சி என்பது மனக்காட்சியைக் குறிக்கும். ஐம்புல உணர்வுகளாலும் புலனாகும் மனக்காட்சியையே (*Mental Image*) நாம் காட்சி உருவகம் அல்லது உருக்காட்சி என்கிறோம்"[7] இமேசரி (*Imagery*) எனப்படும் இஃது உளவியலுடன் தொடர்புடையது மனத்திரையில் தோன்றும் உருவே இதன் அடிப்படையாகும். கம்பனின் உருக்காட்சிப் படலத்தை நினைவு கூறலாம். உருவெளித்தோற்றம் என்று தமிழ் வழக்கில் கூறப்படுகிறது.

பிரின்சுடன் பல்கலைக்கழக இலக்கிய கொள்கை களஞ்சியம் (*Princeton encyclopedia of poetry and poetics 1975*) இக்கோட்பாடு பற்றி மிக விரிவான விளக்கங்களைத் தருகிறது. கண்ணால் கண்டதை மனத்திரையில் தோற்றுவிப்பதே 'உரு' எனப்படும். ஒரு வண்ணத்தை ஒருவன் பார்த்ததும் அவன் மனத்திலும் அந்நிறம் பதிவாகிறது. அதைக் காணாத போதும் பிறகு அந்நிறம் பற்றிய உரு பல்வேறு நிலைகளில் அவன் மனதினுள் தோன்றலாம். ஒரு பாடலின் பொருள் வேறு, அது உருவாக்கியுணர்த்தும் 'உரு' வேறு என்பதை புரிந்து கொள்ள வேண்டும். சுருக்கமாக ஒரு பாடலைப் படிக்கிறோம் மிக ஆழமான பொருளாக இல்லாமல் படித்தவுடனேயே நம் மனக்கண்ணில் அஃது உணர்த்தும் செய்திகளை ஓர் 'உரு' ஆக்கி படைத்துக் காட்டினால் அது உருக்கவிதை எனலாம்.

கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும் மெய்ப்பாடு பற்றி தொல்காப்பியர் கூறும் போது ஐம்புல தொடர்பு பற்றியும் அவற்றுள் மிக சிறப்புடைய காட்சியுரு, கேள்வியுருக்கள் பற்றியும் உருக்கோட்பாட்டாளர்கள் கூறுவன பொருத்திப் பார்க்க கூடியதாக உள்ளன.

**தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாடு:**

செய்யுள்களில் மெய்ப்பாட்டை ஓர் உறுப்பாக தொல்காப்பியர் கூறுகிறார் "மெய்யின் கண் தோன்றுதலின் மெய்ப்பாடாயிற்று"[8] என்று இளம்பூரணர் விளக்குவர். இது நாடக நூல் சார்பான விளக்கம். பேராசிரியர், ''மெய்ப்பாடு என்பது பொருள்பாடு என்று கூறுவர். அதாவது, 'உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்கு புலப்படுவதோராற்றான் வெளிப்படுதல்''[9] என்று விளக்குவது இலக்கிய சார்பான விளக்கமாகும்.

**"பண்ணை தோன்றிய எண்ணான்கு பொருளும்**
**கண்ணிய புறனே நானான்கு என்ப"**[10]

மகளிர் விளையாடும் போது விளையாட்டு ஆயத்தின் கண்தோன்றிய எண்ணான்கு 32 பொருள்கள் ஆகும் என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

**"நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**
**அப்பால் எட்டாம் மெய்ப்பா டென்ப"**[11]

நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை ஆகிய எட்டும் மெய்ப்பாடாகும். கண்ணாலும் செவியாலும் உணரும் உணர்வுடைய மாந்தர்களுக்கு மெய்ப்பாட்டை உணர்தல் எளிது. மற்றவர்க்கு அரிது எனக் கூறி மெய்ப்பாட்டை நன்னயப் பொருள்கோள் என தொல்காப்பியர் பொருள் கூறுகிறார்.

**அகத்திணை மெய்ப்பாடுகள்:**

---

- களவு காலத்தில் இயற்கை புணர்ச்சிக்கு முன் நிகழ்வன, புணர்ச்சிக்கு பின் நிகழ்வன என 24 மெய்ப்பாடுகள் கூறப்படுகின்றன.
- களவு காலத்தில் பிரிவில் நிகழ்வன 20 மெய்ப்பாடுகள் கூறப்படுகின்றன
- தலைவனை திருமணத்திற்கு தூண்டும் படியான மெய்ப்பாடுகள் 8 கூறப்படுகின்றன.
- திருமணம் ஆன பிறகு ஏற்படும் 10 மெய்ப்பாடுகள் கூறப்படுகின்றன.

---

**தலைவி கூற்றில் மெய்ப்பாடு புலப்படும் விதம்:**

**"நின்ற சொல்லர் நீடுதோன் றினியர்**
**என்றும் என்தோள் பிரிபறி யலரே**
**தாமரைத் தண்தா தூதி மீமிசைச்**

**சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்"[12]**

இப்பாடலில் தலைவனின் புகழினைத் தலைவி கூறுகிறாள். தலைவனின் புகழை கூறும்போது சொல்லிய சொல்லிலிருந்து மாறுபடாதவர் நிலைத்த இனிமையான தன்மை உடையவர் என்று கூறுவதிலிருந்து கல்வி கேள்விகளில் சிறந்த சான்றோர்கள் சொல் தவற மாட்டார்கள். எவ்வாறென்றால் 'நிலம் பெயரிலும் நின்சொற் பெயரால்'[13] புலவர் இருப்பிடர்தலையார் பாண்டியன் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதிக்கு செவியறிவுறுத்தும் விதமாக இப்பாடல் அமைகிறது. நிலநடுக்கம் ஏற்பட்டு இடம் பெயர்ந்தாலும் நீ சொன்ன சொல்லிலிருந்து தவறி செல்லாதே என்று புலவர் மன்னருக்கு அறிவுறுத்துகிறார். பதிற்றுப்பத்து பாடலில் "நிலம் திறம் பெயரும் காலை ஆயினும் கிளந்த சொல் நீ பொய்ப்பு அறியலையே"[14] சொன்ன சொல் பொய்க்கும்படி நடக்காதவன் என சேரலாதன் அந்துவஞ் சேரல் பண்பை கபிலர் பாராட்டுகிறார். இவ்வாறு பழ இலக்கியங்கள் கூறிய உயர்ந்தப் பண்பை மனதில் கொண்டு தலைவி 'நின்று சொல்லர்' என்ற நற்றிணைப் பாடலில் தலைவனின் உயர்ந்தக் குணத்தை கூறும்போது தொல்காப்பியர் கூறிய மெய்ப்பாட்டில் கல்வி, தறுகண்மை, புகழ், கொடை என்ற நான்கு வகையில் புகழ் என்ற பெருமிதச்சுவை தோன்றத் தலைவி கூற்று அமைந்ததைக் காணலாம். "நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும் வானின்றி அமையாது ஒழுக்கு" (குறள் - 20) நீரில்லாமல் இவ்வுலகில் எந்த உயிரினமும் எந்த செயலையும் செய்ய முடியாது. எல்லா சூழ்நிலையிலும் நீரின் தேவை தவிர்க்க முடியாத ஒன்றாகும். அதுபோல தலைவன் இல்லாமல் தலைவியால் சிறப்படைய முடியாதது எதைப் போன்று என்றால் நீரின்றி இவ்வுலகமானது சிறக்க இயலாதது போல, தலைவனின் அருள் கொடை இல்லாமல் தலைவியால் சிறந்து விளங்க இயலாது என்று தலைவி கூற்று வாயிலாக எடுத்துரைக்கிறாள்.

**"பூங்கண் புதல்வனே பொய் பல பாராட்டி**
**நீங்காய் இகவாய் நெடுங் கடை நில்லாதி**
**ஆங்கே அவர்வயிற் சென்றீ அணிசிதைப்பான்**
**ஈங்கெம் புதல்வனைத் தந்து"[15]**

இப்பாடலில் தலைவன் சேரியிலுள்ள பரத்தையின்பால் சென்று நீண்ட காலமாக தலைவியை காணவராமல் காலம் தாழ்த்தியப் பின் நெடுநாள் கழித்து தலைவியின் இல்லத்தின் வாசலில் நின்று புதல்வனைப் பொய் பலக் கூறி பாராட்டி நின்றான். அவ்வாறு பாராட்டியத் தலைவனைத் தலைவி கடிந்துரைக்கிறாள். தலைவனின் பெருமைக் கெட்டு விட்டதால் மருட்கை வகையாகிய சிறுமை என்ற மெய்ப்பாடு தோன்றத் தலைவி கூற்று அமைந்தது. நெடிய இந்த வாயிலில் நில்லாதே. சேரியிலுள்ள பரத்தையிடம் செல். இப்புதல்வனை அழைத்து சென்றால்,

அவன் பரத்தையின் தலையில் சூடியப் பூக்களை கசக்கி அவள் அழகைச் சிதைப்பான். அதனால் அவனை விட்டுச்செல் என்று தலைவி தலைவனை இழிவுபடுத்துகிறாள். இவ்வாறு இழிவுபடுத்தியதால் தொல்காப்பியர் கூறிய மெய்ப்பாட்டில் இழிவு மெய்ப்பாடு தோன்றத் தலைவி கூற்று அமைந்தமைக் காணலாம்.

**தோழி கூற்றில் மெய்ப்பாடு புலப்படும் விதம்:**

**"அயிரை பரந்த அந்தண் பழனத்து**
**ஏந்தெழில் மலர்ந்த தூம்புடைத் திரள்கால்**
**ஆம்பல் குருநர் நீர்வேட் டாங்கியவள்**
**இடைமுலைக் கிடந்தும் நடுங்க லானீர்**
**தொழுதுகாண் பிறையில் தோன்றியான் உமக்கு**
**அரியம் ஆகிய காலைப்**
**பெரிய நோன்றனிர் நோகோ யானே"**[16]

இப்பாடலில் நீருக்குள்ளே இருந்து ஆம்பலை பறிப்போர் குடிநீருக்கு வேட்கை கொண்டது போல நீ திருமணம் ஆகி தலைவியுடன் கூடியிருந்தும் காம வேட்கையால் நடுங்குகின்றாய். திருமணம் முடிந்து தலைவியோடு கூடியிருந்த பின்னும் உன் காம வேட்கை தணியாமலிருக்கின்ற அளவுகடந்த காமத்தை தோழி எள்ளல் சுவையோடு எள்ளி நகையாடுகிறாள். இவ்விடத்தில் தொல்காப்பியர் கூறிய நகை மெய்ப்பாடு தோன்றி எள்ளல் சுவை அமைய தோழியின் கூற்று அமைகிறது. ஒரு மாதத்தில் ஒரு நாள் மட்டும் தோன்றும் மூன்றாம் பிறை காண்பதற்கு அரிதானது அதுபோல தலைவியைக் களவு காலத்தில் காண்பதற்கு அரியதாக இருந்தபோது நீ எப்படி பொறுத்துக் கொண்டாயோ என்பதை நினைத்து நான் வருந்துகிறேன் என்று தோழி கூறுவதில் இளிவரல் மெய்ப்பாடு தோன்றி வருத்தம் என்ற வகையில் கூற்று அமைகிறது.

**"வாழி ஆதன் வாழி அவினி**
**வேந்துபகை தணிக யாண்டு பல நந்துக**
**எனவே டோளே யாயே யாமே**
**மலர்ந்த பொய்கை முகைந்த தாமரைத்**
**தண்துறை ஊரன் வரைக**
**எந்தையுங் கொடுக்க எனவேட் டேமே"**[17]

தலைவன் பொருள் தேடல் பொருட்டு தலைவியைப் பிரிந்துச் சென்றான். பிரிந்து சென்ற காலத்தில் தலைவி தலைவனை நினைத்து அச்சத்தால் இறைவனை வேண்டி வணங்கி நின்றாள் என்பதை தோழி தலைவனிடம் கூறுகிறாள். இப்பாடலில் அச்சம் மெய்ப்பாடு தோன்ற தோழியின் கூற்று அமைந்தது. அச்சம் ஏற்பட்டமையால் தலைவி தெய்வத்தை வணங்கி நின்றாள் என்பதில் தெய்வம் என்பது இவ்விடத்தில் மெய்ப்பாட்டில் அச்சத்தின் வகையாகிய தெய்வம் என்ற நிலையைக் குறித்ததாகும். ஆகவே, அச்சம் சுவை தோன்ற தோழியின் கூற்று அமைந்துள்ளது.

**தலைவன் கூற்றில் மெய்ப்பாடு புலப்படும் விதம்:**

**"யாயும் ஞாயும் யார கியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக்**
**கேளீர் யானும் நீயும் எவ்வழி அறிதுஞ்**
**செம்புலப் பெயனீர் போல**
**அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே"**[18]

தலைவன் தலைவியிடம் உன்னுடைய தாயும் தந்தையும் யார் என்று தெரியாது. என்னுடைய தாயும் தந்தையும் உனக்கு யார் என்று தெரியாது. இருவரும் எவ்வித உறவும் இல்லாமல் நாம் கூடி மகிழ்ந்தோம். நம் காதல் நெஞ்சம் செம்புல பெயல்நீர் போல கலந்து ஒன்றுபட்டுள்ள நாம் ஒருவரையொருவர் பிரியமாட்டோம் என தலைவன் தலைவிக்கு ஆறுதல் கூறுகிறான். தலைவன் தலைவி இருவரும் ஒத்த காதலால் ஒன்றுபட்டதை மெய்ப்பாட்டியலில் உவகை வகையில் அடங்குகின்றன. காதலால் ஒன்றுபட்டு கூடியிருந்து இன்பம் பயத்தமை புணர்வு என்னும் பிரிவில் வருகிறது இவ்விடத்தில் தொல்காப்பியர் கூறிய உவகை மெய்ப்பாட்டில் புணர்வு என்ற நிலைத் தோன்ற தலைவனின் கூற்று அமைந்திருப்பதைக் காணலாம்.

**“நகுகம் வாராய் பாண பகுவாய்**
**அரிபெய் கிண்ணி ஆர்ப்பத் தெருவில்**
**நேர்நடை பயிற்றுந் தேமொழிப் புதல்வன்**
**பூநாறு செவ்வாய் சிதைத்த சாந்தமொடு**
**காம நெஞ்சந் துரப்ப யாந்தம்**
**முயங்கல் விருப்பொடு குறுகினேன் ஆகப்**
**பிறைவனப் புற்ற மாசறு திருநுதல்**

**நாறிருங் கதிப்பினெங் காதலி வேறுணர்ந்து**
**வெரூஉமான் பிணையின் ஒரீஇ**
**யாரை யோவென்று இகந்துநின் றதுவே"[19]**

தலைவி குழந்தைக்கு தெருவில் நடைபயிற்றுவித்துக் கொண்டிருந்தாள். தலைவனை கண்டதும் குழந்தை அப்பா என்றது. தலைவி குழந்தையைக் கடிந்துகொண்டாள். அந்நிகழ்வை தலைவன் பாணனிடம், 'நான் குழந்தையைத் தூக்க அருகில் சென்றதும் மானிடரைக் கண்டு மருண்டோடும் மானைப் போன்று விலகி நின்று யாரையோ நீ? என வேறுபட்டு வினவுகிறாள்' என்று கூறினான். 'நாறு இருங் கதிப்பின் எம் காதலி வேறு உணர்ந்து வெரூஉம் மான் பிணையின் ஒரீஇ' என்பதில் தலைவி தலைவனை கண்டதும் மருட்கையால் மானிடரைக் கண்டு மருண்டோடும் மானைப் போன்று விலகிச் சென்று யார் நீ? என வினவுவதில் தொல்காப்பியர் கூறிய மெய்ப்பாட்டில் மருட்கைச்சுவை தோன்ற ஆக்கம் என்ற வகையில் கூற்று அமைந்து இருப்பதைக் காணலாம்.

**முடிவுரை:**

சங்க இலக்கியங்களில் தலைவன் தலைவி தோழி ஆகியோரின் கூற்றுகள் மெய்ப்பாட்டினை உணர்த்தி நிற்கின்றன. மெய்ப்பாடு என்பது நம் புலன் உறுப்புக்களால் நம்மில் ஏற்படுகின்ற மாற்றத்தை குறிப்பதாகும். கூற்றுகளில் நேரடியாகப் பொருள் உணர்த்தாமல் சூழலின் வழியாக மெய்ப்பாடு தோன்றப் பொருள் உணர்த்தப்படுகிறது. உள்ளுறை, உவமை, இறைச்சி போன்றவற்றிலும் நேரடியாகப் பொருள் உணர்த்தாமல் கருப்பொருளின் வழியே கூறிச் சொல்வதை நாம் இலக்கியங்களில் காணலாம். அந்த வகையில் கூற்றுகளில் மெய்ப்பாடு புலப்பட்டு நிற்கிறது என்பதை இக்கட்டுரையின் வாயிலாக நாம் அறிந்து கொள்ளலாம்.

**அடிக்குறிப்பு:**

1. செ.வை. சண்முகம், பொருளிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் — முதல் தொகுதி (இறைச்சியும் தொடையும்) மெய்யப்பன் பதிப்பகம்,2009. பக் - 10
2. செ.வை. சண்முகம், பொருளிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் — முதல் தொகுதி (இறைச்சியும் தொடையும்) மெய்யப்பன் பதிப்பகம்,2009. பக் — 10
3. தமிழண்ணல், இந்திய இலக்கியச் சிற்பிகள் தொல்காப்பியர், சாகித்திய அக்காதெமி பதிப்பகம், 1998. பக் — 82
4. தமிழண்ணல், இந்திய இலக்கியச் சிற்பிகள் தொல்காப்பியர், சாகித்திய அக்காதெமி பதிப்பகம், 1998. பக் — 82

5. தமிழண்ணல், தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள், பாகம் — 1, செல்லப்பா பதிப்பகம், 2004. பக் — 211
6. வை. சச்சிதானந்தன், மேலை இலக்கியச் சொல்லகராதி, சென்னை,1983. பக் — 106
7. தமிழண்ணல், ஒப்பிலக்கிய அறிமுகம், மதுரை,1979. பக்.182
8. இளம்பூரணனார் உரை, தொல்ககாப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம்,2005. பக். 348
9. தமிழண்ணல், இந்திய இலக்கியச் சிற்பிகள் தொல்காப்பியர், சாகித்திய அக்காதெமி பதிப்பகம், 1998. பக் — 82
10. இளம்பூரணனார் உரை, தொல்ககாப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம்,2005. பக். 345
11. இளம்பூரணனார் உரை, தொல்ககாப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம்,2005. பக். 347
12. இளம்பூரணனார் உரை, தொல்ககாப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம்,2005. பக். 264
13. புலியூர்க்கேசிகன், புறநானூறு, சாரதா பதிப்பகம், 2010. பக்.5
14. புலியூர்க்கேசிகன்,பதிற்றுப்பத்து தெளிவுரை, பாரி நிலையம், 1974. பக்.323.
15. இளம்பூரணனார் உரை, தொல்ககாப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம்,2005. பக். 268
16. இளம்பூரணனார் உரை, தொல்ககாப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம்,2005. பக். 279
17. இளம்பூரணனார் உரை, தொல்ககாப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம்,2005. பக். 279
18. இளம்பூரணனார் உரை, தொல்ககாப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம்,2005. பக். 252
19. இளம்பூரணனார் உரை, தொல்ககாப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம்,2005. பக். 253

---

**துணை நின்ற நூற்கள்:-**

❖ இளம்பூரணனார் உரை, தொல்ககாப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், 2005.
❖ செ.வை. சண்முகம், பொருளிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் — முதல் தொகுதி (இறைச்சியும் தொடையும்) மெய்யப்பன் பதிப்பகம்,2009.

❖ தமிழண்ணல், இந்திய இலக்கியச் சிற்பிகள் தொல்காப்பியர், சாகித்திய அக்காதெமி பதிப்பகம், 1998

❖ தமிழண்ணல், தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள், பாகம் — 1, செல்லப்பா பதிப்பகம், 2004.

❖ தமிழண்ணல், ஒப்பிலக்கிய அறிமுகம், மதுரை,1979.

❖ புலியூர்க்கேசிகன், புறநானூறு, சாரதா பதிப்பகம், 2010.

❖ புலியூர்க்கேசிகன்,பதிற்றுப்பத்து தெளிவுரை, பாரி நிலையம், 1974.

❖ வை. சச்சிதானந்தன், மேலை இலக்கியச் சொல்லகராதி, சென்னை,1983.

*Refernce books*

❖ *Ilampuranaar urai, Tholkapiyam Porulathigaram, saratha padhipagam,* 2005.

❖ *Se. vai. Sanmugam , porulilakkana kotpadu Tholkapiyam- first part (Iraiccium Thodaium) Meiyappan pathippagam.* 2009

❖ *Thamizhannal, indhiya ilakkiya chirpigal Tholkapiyar, Sahithiya academy pathipagam.*1998

❖ *Thamizhannal, tholkapiyarin ilakkiya kolgaigal, part* -1, *chellappa pathipagam,* 2004.

❖ *Thamizhannal, Oppilakkiya Arimugam,* 2010.

❖ *Pliuoorkesigan, porananooru,saratha pathippagam,*2010

❖ *Pliuoorkesigan, pathittupathu thelivuurai , paari nilaiyam,* 1974.

❖ *Vai . satchithananthan, melai ilakkiya solagarathi, Chennai-*1983.

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com